## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்.

**அ.வ.எண். 112/2022**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. தனுஷ்கோடி (எ) பொன்னம்மாள் | க/பெ. | : | திரு.ராமலிங்கம் |
| ஊர் | : | செக்காரக்குடி | தாலுகா | : | |
| மாவட்டம் | : | தூத்துக்குடி | தொழில் | : | விவசாயம் |
| நாள் | : | 27.07.2026 | | | |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** : வா.சா.2 (சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது)

1.உங்களது பாட்டியும், வாதி சுப்புலெட்சுமியின் பாட்டியும் உடன்பிறந்தவர்கள் என்றால் சரியல்ல. அவர்கள் எனக்கு உறவினர்கள் கிடையாது. வாதி சுப்புலெட்சுமிக்கு 2007 ல் அவரது தாயார் வள்ளியம்மாள் செட்டில்மெண்ட் ஆவணம் செய்து கொடுத்துள்ளதாக நீங்கள் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தில் கூறியுள்ளீர்கள். மேற்படி ஆவணத்தை நீங்கள் படித்து பார்த்துள்ளீர்களா என்றால் இல்லை. இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வந்ததா என்றால் இல்லை. வாதி சுப்புலெட்சுமி உங்களிடம் இந்த வழக்கிற்காக சாட்சியம் அளிக்க கேட்டுக்கொண்டதன் பேரில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

2. இந்த வழக்கில் நீங்கள் நடைபாதை என்று குறிப்பிட்டுள்ள இடத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. அந்த நடைபாதையின் விஸ்தீரணம் தென்வடல், கிழமேல் அளவு தெரியுமா என்றால் அகலம் 2 முழம், நீளம் தெரியாது. 1ம் பிரதிவாதி சண்முகத்தம்மாள் கிரையம் வாங்கிய பத்திரத்தை பார்த்துள்ளீர்களா என்றால் பார்த்தது இல்லை. எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி

PADMAPRIYA K
Digitally signed by PADMAPRIYA K
Date: 2026.07.27 17:49:41 +0530

சண்முகத்தம்மாள் 2ம் தபசில் பாதையை அடைக்க முயற்சி செய்ததாக கூறியுள்ளீர்கள் எப்போது 1ம் பிரதிவாதி பாதையை அடைக்க முற்பட்டார் என்று கூறுகிறீர்கள் என்றால் சுமார் 4 வருடம் இருக்கும். நீங்கள் நடைபாதை என்று குறிப்பிடும் இடம் 1ம் பிரதிவாதியின் இடம் என்றால் சரியல்ல.

3.வழக்கு சொத்திற்கு வடபக்கம் வண்டி பாதை இருந்ததா என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கு கீழ்பக்கம் உள்ள சொத்து உங்களுக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் எனது பெற்றோர் எனக்கு சீதனமாக கொடுத்த சொத்து ஆகும். உங்களது இடத்திற்கு வடக்கு பக்கம் யாருடைய இடம் உள்ளது என்றால் கார்த்திக் மனைவி சிவஞானம் என்பவரின் இடம் உள்ளது. மேற்படி சிவஞானம் அவருடைய இடத்திற்கு வடக்கு பக்கம் உள்ள இடத்தை தான் பாதையாக பயன்படுத்தி வருகிறார் என்றால் சரிதான். வாதி சுப்புலெட்சுமிக்கு எதன் அடிப்படையில் வழக்கு சொத்து பாத்தியம் என்றால் அவரது தாயாரிடம் இருந்து சீதனமாக எழுதிக்கொடுத்ததன் அடிப்படையில் பாத்தியம். வாதிக்கு மொத்தம் எவ்வளவு செண்ட் பாத்தியம் என்றால் தெரியாது. நீங்கள் குறிப்பிடும் பாதைக்கான இடம் யாருக்கான இடம் என்றால் வாதி சுப்புலெட்சுமியின் இடம் பாதையின் கழிவுக்காக இடத்தை வாதி விட்டுவிட்டார். அதற்கு கீழ்பக்கம் சண்முக்கத்தம்மாள் இடம் உள்ளது.

4.நீங்கள் பாதை என்று சொல்லப்படும் இடம் வாதிக்கு சுப்புலெட்சுமிக்கு பத்திரத்தின் அடிப்படையில் பாத்தியமா அல்லது உரிமையின் அடிப்படையில் பாத்தியமா என்றால் பத்திரத்தின் அடிப்படையில் தான் பாத்தியம். எந்த பத்திரத்தின் அடிப்படையில் பாத்தியம் என்றால் ராமலெட்சுமி வாதியின் தாயார் வள்ளியம்மாளுக்கு எழுதிக்கொடுத்த பத்திரத்தின் அடிப்படையில் பாத்தியம். நீங்கள் மேற்படி

PADMAPRIYA K
Digitally signed by PADMAPRIYA K
Date: 2026.07.27 17:49:46 +0530

ராமலெட்சுமி எழுதிக்கொடுத்த பத்திரத்தை பார்த்துள்ளீர்கள் என்றால் இல்லை. உங்களுக்கு மேற்படி பாதை இருப்பதாக யார் கூறினார்கள் என்றால் அவர்கள் பாதையை பல காலமாக பயன்படுத்தி வருவதை நான் பார்த்துள்ளேன். பாதையை வாதி மேற்படி பல காலமாக பயன்படுத்தி வருவதாக பொய்யாக கூறியுள்ளீர்கள் என்றால் சரியல்ல.

5. வழக்கு சொத்திற்கு வடக்கு பக்கம் உள்ள வண்டி பாதையை பல நபர்கள் ஆக்கிரமித்து வைத்துள்ளதால் பிராது 2ம் தபசில் சொத்தில் பாதை என்று உரிமை கோருகிறீர்கள் என்றால் சரியல்ல. உங்களது சகோதரி வள்ளியம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை நீங்கள் கிரையம் வாங்கியுள்ளீர்கள் என்றால் இல்லை. உங்களது சொத்தின் சர்வே எண் என்ன என்றால் தெரியாது. வழக்கு சொத்திற்கும் சர்வே எண் 711/2C வடபக்கம் உள்ள பாதையை தான் வாதி பாதையாக பயன்படுத்தி வந்தார் என்றால் சரியல்ல. நீங்கள் வாதிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

PADMAPRIYA K
Digitally signed by PADMAPRIYA K
Date: 2026.07.27 17:49:50 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.